<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 83/2022</u>

பெயர் : தேவி D.W.1. Cross

க/பெ. : சுந்தரவடிவேல்

தேதி : 06.10.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை:</u> –

1. தாவா சொத்து நடுக்கரை மேலப்பாதி, முத்துக்குமரன் நகரில் உள்ளது என்றால் சரிதான். நான் தாவா சொத்தை வாசாஆ 2 ஆன ஆவணம் மூலம் 21.02.2011ல் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ 2ல் பக்கம் 2ல் ஒட்டப்பட்டுள்ள புகைப்படம் என்னுடைது தான். முத்துக்குமரன் நகர் 7 புல எண்களில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி நகர் நடுக்கரை மேலப்பாதி ஊராட்சியில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வாசாஆ 2ன் மூலம் கிரயம் பெற்ற சொத்தை தான் வாதிக்கு வாசாஆ 1ன் மூலம் கிரயம் செய்துகொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

2. வாசாஆ1ல் ஒட்டப்பட்டுள்ள புகைப்படமும் அதில் உள்ள கையொப்பமும் என்னுடையது என்றால் சரிதான். எனது புகைப்படத்திற்கு மேல் உள்ள புகைப்படம் தான் வாதி சுரேஷ் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை வாதிக்கு விற்கும் போது அளந்து விற்கவில்லை என்றால் சரிதான். வாதி 04.11.2022ல் என்னிடம் கிரயம் வாங்கிய சொத்தின் புல எண்ணில் பிழை இருப்பதாக கூறினாரா என்றால் கூறினார். தற்போது அது சம்பந்தமாக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி வழக்குரையில் கூறியுள்ள புல எண்ணில் திருத்தம் செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.